பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 10உ (27—10—67) வெள்ளி   வெளியூர் : ஐப்பசி 11உ (28—10—67) சனி [இதழ் : 112

நாளை முதல் நல்ல ரக அரிசி!

சென்னை, அக். 27—

"தஞ்சையிலிருந்து 'ஏ. டி. டி. 27' ரக அரிசி வந்து விட்டதால், அக்.28 (நாளை) முதல் சென்னை நகரப் பங்கீட்டுக் கடைகளில் தரமான நல்ல அரிசி கிடைக்கும்" என்று உணவமைச்சர் திரு. மதியழகன் தெரிவித்தார்.

காதால் கேட்டது!

ஒருவர் :—

"இதுவரையில் இல்லாமல் இப்போது மட்டும் காங்கிரசுக் கட்சியினர், தாங்கள் சிறையிருந்ததையும், தடியடி பட்டதையும் பேசியும், எழுதியும், படம் போட்டும் வருகிறார்களே — என்ன விசேடம்?"

மற்றொருவர் :—

"வேறொன்றுமில்லை; எப்போதுமில்லாமல் இப்போதுதானே ஆங்காங்கே எதிர்க் கட்சிகளாகி இருக்கின்றனர்—அதன் விளைவுதான்!

துக்க நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் பெண்கள்—அழுகை வருவதற்காக—தங்கள் குடும்பங்களில் நடந்த பழைய சாவுகளை நினைத்துக்கொள்வார்களாம்!

அதைப்போல் மக்கள் மத்தியில் தியாகத்தையும் உழைப்பையும் காட்டுவதற்கு - அனுசரணையையும் கவனத்தையும் பெறுவதற்குக் காங்கிரசுக்காரர்களுக்குப் பயிற்றுக்கோலாக இருப்பது, பழம் பெருமை ஒன்றுதான்! அதனால்தான் இந்தப் புதிய மாற்றம்!"

★

ஒரு காங்கிரசுக்காரர் :—

"இந்த ஜபல்பூர் மாநாட்டைக்கூட இப்போதே நடத்திவிடுவதும் நமக்கு ஒருவகையில் நல்லதுதான்...!"

இன்னொரு காங்கிரசுக்காரர் :

"ஏனய்யா, அப்படிச் சொல்கிறீர்?"

முதலில் பேசியவர் :—

"பின்னே என்ன? தென் சென்னைத் தேர்தலுக்குப் பிறகு நடைபெறுவதாக இருந்தால், இதையும் கோட்டைவிட்ட நிலையில் அல்லவா அங்கே கூடியிருக்கும் 'அகில இந்தியா'க்களின் முகத்தில்நமது தலைவர் விழிக்க வேண்டியிருக்கும்? இவரே முன்பு சொன்னாரே - அதேபோல் அவர்கள் அனைவரும், 'தோற்று வந்திருக்கும் மூஞ்சியைப் பாரு' என்றல்லவா பேசிக்கொள்வார்கள்?

★

பத்திரிகை படிப்பவர் :—

"உற்சாக வரவேற்பு...... மகத்தான ஊர்வலம்......"

மற்றொருவர் :—

"என்னங்க? ஜபல்பூரிலா? காங்கிரசின் பத்து அம்சத் திட்டங்களுக்கா?"

பத்திரிகை படிப்பவர் :—

"இல்லை; காமராசருக்காம் —அதாவது, காங்கிரசுத் தலைவருக்காம்! நீங்கள் கேட்ட பத்து அம்சத் திட்டங்கள் பற்றியும் சேதி வரும் இனிமேல்!—ஆனால் இப்படி அல்ல!—'திட்டம் பற்றி காட்டமான தாக்கு! மொரார்ஜி - பாட்டில் தீவிரமாக எதிர்த்தனர்!' என்றெல்லாம்!"

சூயஸ் எரிகிறது-- சோவியத் கடற்படை விரைகிறது

இஸ்ரேலிய தாக்குதல்களுக்காளான எண்ணெய்த் தேக்கங்கள் தீப்பற்றி எரிவது, சூயஸ் வட்டாரத்தையே புகைமண்டலமாக்கி இருக்கிறதாம்!

பத்திரிகைக் கூட்டமொன்றில் இத்தகவலை வெளியிட்டிருக்கும் அரபுக் குடியரசு அதிகாரி ஒருவர்,

"சூயஸ் பகுதியில் இருந்த எண்ணெய்க் கிடங்குகள் அனைத்தும் எரி நெருப்புக்கு உள்ளாகியிருக்கின்றன"

என ஒப்புக்கொண்டுள்ளார்.

தியணைப்பு வேலைகள் எதுவும் பலனளிக்காத வகையில் எண்ணெய்க் கிடங்குகள் எரிந்[illegible]பாழ்பட்டிருக்கின்றன!

அரபுக் [illegible]சின் கைவசம் இருந்த[illegible]ணெய் முழுவதும் பாழ்[illegible]யிருப்பதால், எகிப்து, தனது அடுத்த தேவைக்கு வெளிநாடுகளை எதிர்பார்க்கும் நிலை தோன்றியிருக்கிறது!

சூயஸ் பெற்றிருக்கும் இப்புதிய தாக்குதலையொட்டி இந்தப் பகுதியில் உள்ள தனது அமைதிப் பார்வையாளர்களின் எண்ணிக்கையை ஐ. நா. இரண்டு மடங்காக்கி இருக்கிறது!

இதற்கிடையில், 'அரபுக் குடியரசின் பாதுகாப்புக்காக சோவியத் யூனியன் மேற்கொண்டு மூன்று கடற்படைப் பிரிவுகளை உதவியாக அனுப்பியிருக்கிறது' என வாஷிங்டன் செய்தியொன்று கூறுகிறது.

இஸ்ரேலை எச்சரிக்கை செய்யும் இந்த இரஷ்ய முயற்சி, ஐ.நா தீர்மானத்தைவிட அதிக பிரதிபலிப்பினை பார்வையாளர்களிடையே தோற்றுவித்திருக்கிறது!

ஆண்-பெண்-ஆண்டவன்!

ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் மாறியதாக அடிக்கடி வரும் செய்திகளில், இப்போது ஆண்டவனும் கலந்திருக்கிறார்!

கேரளத்தில், 'எட்டுமுனு' என்ற இடத்திற்கு அருகில், பத்தொன்பது வயதுடைய அய்யப்பன் என்பவன் பெண்ணாக மாறி, 'தங்கமணி' என்ற பெயரை மேற்கொண்டிருப்பதாக இருஞ்சலகுடா செய்தியொன்று கூறுகிறது!

பெண்ணாக மாறுவதற்கு முன், ஆண்டவன் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்த அந்த அய்யப்பன் — தங்கமணியாக ஆனவுடன்—'தெய்த நம்பிக்கையில் திளைத்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது!

சட்டப்படி நடந்ததால் 'சஸ்பெண்டு' உத்தரவு

ஒரு புதிரான செய்தி!

★

'சட்டப்படி' நடந்தார்—என்ற காரணத்துக்காக, கோபால கிருஷ்ணமேனன் என்னும் கன்னம்குளம் போலீசு நிலைய அதிகாரி ஒருவர் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ளார்.

கூட்டணி ஆட்சியில் அங்கம் வகிக்கும் மார்க்சிய கம்யூனிஸ்டின் அமைப்பான 'பாப்புலர் கமிட்டி' உறுப்பினர்கள் தகவல் கொடுத்ததன் பேரில், அந்தப் போலீசு அதிகாரி, தான் கைப்பற்றிய கள்ளக் கடத்தல் தானியங்களை நீதி மன்றத்தில் ஒப்படைக்க முயன்றபோது, கம்யூனிஸ்டு உறுப்பினர்களால் தடுக்கப்பட்டிருக்கிறார்!

கைப்பற்றப்பட்ட தானியங்களை நீதி மன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று நியதி இருந்தாலும், அதை அந்த இடத்திலேயே விற்பனைக்குக் கொடுத்துவிடுமாறு கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தியிருக்கின்றனர். இதற்கு இசைய மறுத்த அந்தப் போலீசு அதிகாரிக்கு, வேலை நீக்க உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது!

மேற்கொண்டு விசாரணையும் தொடர இருப்பதாகத் தெரிகிறது.

பிர்லா உறவைத் துண்டிக்கிறது பஞ்சாப் அரசு!

ரஷ்ய உதவியுடன் புதிய மாதிரிப் பண்ணை

விதைப் பண்ணை நிறுவுவதற்கு, பிர்லா நிறுவனத்துடன் மேற்கொண்டிருந்த ஒப்பந்தத்தினை இரத்து செய்துவிடுவதென பஞ்சாப் அரசு முடிவு செய்திருக்கிறது.

இதற்கான மசோதா ஒன்று வருகிற சட்டமன்றக் கூட்டத்தில் தாக்கல் ஆக இருக்கிறது.

ஒப்பந்தத்தின்படி, பிர்லா சகோதரர்களின் நிறுவனத்துக்கு வழங்கியிருந்த அரசினர் நிலம் திரும்பப் பெறப்படும்!

இதற்குப் பதிலாக, மத்திய அரசு உதவியுடன் 11,000 ஏகர் நிலத்தில் மாதிரி விதைப் பண்ணை ஒன்றை துவங்குவதென மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான நிலத்தைப் பதினைந்து ஆண்டுக் காலத்துக்கு ஆண்டொன்றுக்கு ஒரு ரூபாய் மட்டுமே குத்தகையாக வசூலித்து, மத்திய அரசுக்கு அளிப்பதென பஞ்சாப் முடிவு எடுத்துள்ளது.

சூரத்கார் விதைப் பண்ணையைப் போன்று பெரிய அளவில் துவங்க இருக்கும் இந்த முயற்சிக்கு, இரஷ்யா உதவி வழங்குகிறது!

மணிப்பூர் பகுதியில் கலக நாகர்கள் வரி வசூல்!

'அந்நிய ஆக்கிரமிப்பு' போல் அவர்களின் 'ஆட்சி எல்லை'யும் விரிவடைகிறது!

இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து பிரிவினை கோரும் கலக நாகர்கள், 'அமைச்சரவை' ஒன்றினை நடத்திவருவது போலவே, 'நிர்வாக அலுவல்'களையும் மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

'பி.எஸ். ஜேம்ஸ்' என்னும் கலக நாகர்களைச் சேர்ந்த 'கமிஷனர்' ஒருவர், மணிப்பூர் பகுதியில் தனக்குக் கீழ் உள்ள 'அதிகாரி'களுக்கெல்லாம், 'உத்தரவு' ஒன்றினைப் பிறப்பித்திருக்கிறார்!

அதன்படி, மணிப்பூர் பகுதியில் உள்ள வீடு ஒவ்வொன்றிலும், ரூ. 31 ஆண்டு வரியாக வசூலிக்கப்பட இருக்கிறது!

இந்த வரி, கலக நாகர்கள் நடத்தும் 'பெடரல் ஆட்சி'க்குப் போக இருக்கிறது எனக் கூறப்படுகிறது!

"மணிப்பூர் [illegible] பகுதி வரையில் அவர்களது 'நிர்வாகம்' விரிவினைப் பெற்றிருப்பது இதுவே முதல் தடவை" என, பார்வையாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்!

மணிப்பூரும் பிரச்சினையாகிறது!

நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனம் செய்திருக்கும் மத்திய அரசின் போக்கினை எதிர்த்து, மணிப்பூர் பகுதி ஐக்கிய சட்டமன்றக் கட்சி, நாளை (அக். 28) அங்கே வேலை நிறுத்தம் செய்ய இருக்கிறது!

உலக உணவு மாநாட்டுக்குச் செல்லும் இந்தியக்குழு

கே. ஏ. மதியழகன் துணைத் தலைவர்

சென்னை, அக். 26—

இத்தாலியின் தலைநகரான ரோமில் நடைபெறவிருக்கும் உலக உணவு மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியாவிலிருந்து செல்லும் குழுவிற்கு, தமிழக உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் துணைத் தலைவராக இருப்பார்; இந்திய உணவமைச்ச[illegible] திரு. செகன்சீவன்ராம் தலைமை[illegible]பார்.

இந்த மாநாடு, ஐ. நா. உணவு—வேளாண்மை நிறுவனத்தின் ஆதரவில் நவ. 4-ஆம் நாள் முதல் மூன்று வாரங்கள் நடைபெறும்.

திரு. செகசீவன்ராம் நவ. 12-ம் நாள் டில்லிக்குத் திரும்பிவிடுவார்; பிறகு திரு. மதியழகனே இந்தியக் குழுவுக்குத் தலைமைவகிப்பார்.

மாநாடு முடிந்ததும், திரு.கே.ஏ. மதியழகன், இங்கிலாந்து—பிரான்சு—பெல்ஜியம்—சுவிட்ஜர்லாந்து—மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகட்குச் செல்லத் திட்டமிட்டிருக்கிறார்.

மாணவர்கள் ஈட்டிய மகத்தான வெற்றி

சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் பேரவை கழக வசம்

இரா. சனார்த்தனம் தலைவராகத் தேர்வு

சென்னை, அக். 27—

சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் பேரவைக்குத் தலைவராக தி. மு. க. மாணவர் அமைப்பைச் சேர்ந்த தோழர் இரா. சனார்த்தனம் இன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று மாலை நடைபெற்ற இந்தத் தேர்தலில், சென்னையில் உள்ள 33 கல்லூரிகள் கலந்துகொண்டன. தலைவர் பதவிக்குக் கடும் போட்டி இருந்தது.

தி. மா. மு. க. தலைவரும் சிறந்த பேச்சாளரும் பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்தவருமான தோழர் இரா. சனார்த்தனமும், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த தண்டாயுதபாணி என்பவரும் போட்டியிட்டனர்.

காங்கிரசு மாணவருக்காக காங்கிரசுக் கட்சித் தலைமை கடும் முயற்சி செய்தது.

இறுதியில் சனார்த்தனம் 20 வாக்குகள் பெற்று வாகை சூடினார்; காங்கிரசு மாணவர் 15 வாக்குகள் மட்டுமே பெற்றுத் தோற்றார்.

செயலாளர் தேர்வு

செயலாளர் பதவிக்குப் போட்டியிட்ட பொறியியற் கல்லூரி மாணவர் தோழர் யாகியா (ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.பி. அவர்களின் இளவல்) வெற்றி பெற்றார்.

துணைச் செயலாளர் தேர்வு

துணைச் செயலாளராக அரசினர் கல்லூரி மாணவர் ஆண்டியப்பன் (தி. மு. க.) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் பேரவை கடந்த இருபதாண்டுக் காலமாக காங்கிரசுக் கட்சிச் சார்புடைய மாணவர்கள் ஆதிக்கத்திலேயே இருந்துவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., பி.எல்.

திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 10 (27—10—67) வெள்ளி

பக்தவத்சலத்தின் சொத்தை வாதம்!

[2]

'பொய்யைச் சொன்னால்கூடப் பொருந்தச் சொல்லவேண்டும்' என்பார்கள். பொய்யைச் சொல்லத் துணிகின்றவர்கள் கற்றிருக்க வேண்டிய இந்த அரிச்சுவடியைக்கூட, பொய் சொல்வதை மட்டுமே தமது அரசியல் வாழ்வாகப் பெற்றிருக்கின்ற பக்தவத்சலனார் இதுவரையில் கற்றுக்கொள்ளாமலிருப்பார் என நம்புவதற்கில்லை.

பொருத்தமாகப் பொய் சொல்லக்கூடிய அரிய வித்தையைக் கற்றுக்கொண்டிருக்கின்ற அவர், பின் ஏன் பொருத்தமற்ற பொய்யைப் பேசுவதிலேயே இப்பொழுது ஈடுபட்டிருக்கின்றார்? இதற்கு எது காரணம்?

பதவியை இழந்துவிட்டால், இயல்பாக இருக்கின்ற அறிவுத் திறனும் அத்துடன் இணைந்து அகன்றுவிடும் போலும்! பக்தவத்சலனார் இன்று பேசிவருகின்ற பொருத்தமற்ற பொய்களுக்கும், பொருளற்ற அரசியல் பிதற்றல்களுக்கும், பல ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து அவர் அனுபவித்து வந்திருக்கின்ற பதவியும் அதிகாரமும், அவரைவிட்டு அகன்றுபோய்விட்டிருப்பதுதான் அடிப்படைக் காரணமாக இருத்தல் வேண்டும்.

தென் சென்னைத் தேர்தல் பற்றி பக்தவத்சலனார் வெளியிட்டு வருகின்ற கருத்துக்களும், கழகத்தின்மீது அவர் சுமத்தத் துணிகின்ற குற்றச்சாட்டுக்களும், அவரை, கடைந்தெடுத்த '...'வராகக் காட்டுவதுடன், அவர் நிலைகண்டு நம்மைப் பரிதாபப்படவும் தூண்டுகின்றன.

தென் சென்னையில் இப்பொழுது இடைத் தேர்தல் ஏன் நடைபெறுகிறது என்பதற்கும், இந்த இடைத் தேர்தலில் கழகம் ஏன் பங்குகொண்டிருக்கிறது என்பதற்கும் புதிய விளக்கம் எதுவும் தேவையில்லை.

இந்த இடைத் தேர்தல் நடைபெறுவதைச் சுட்டிக்காட்டி, நமது முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை, முன்னாள் முதலமைச்சர் காய்ந்துகொண்டதைப் பற்றி முன்னர் குறிப்பிட்டிருக்கின்றோம். அவ்வாறு காய்ந்து கொண்டிருப்பதற்கு, 'இன்றையக் கழக அரசின்மீது தாம் கொண்டிருக்கின்ற வயிற்றெரிச்சலைத்தான் முன்னாள் முதலமைச்சர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்' என்ற விளக்கத்தை, ஏற்கனவே தந்திருக்கின்றோம்.

முன்னாள் முதலமைச்சர் கூறியுள்ள மற்றொரு விசித்திரமான குற்றச்சாட்டுக்கு, இப்பொழுது விளக்கம் தருகிறோம் பக்தவத்சலனார் கூறியுள்ள குற்றச்சாட்டு வருமாறு :—

> "இந்திரா காந்தியின் ஆட்சியை மாற்றும் எண்ணம் எங்களுக்கு இல்லை என்று அண்ணாதுரை சொல்லுகிறார் ; அப்படியானால், தென் சென்னையில் தி. மு. கழகம் போட்டியிடுவது ஏன்?"

சனநாயகத் தேர்தல் பற்றிய சராசரி அறிவு பெற்றிருக்கின்றவர்கள்கூட, இதுபோன்ற கேள்வியைக் கேட்கமாட்டார்கள். ஆனால், தம் வாழ்நாளில் பெரும் பகுதியைத் தேர்தலில் செலவிட்டு நல்ல தேர்ச்சி பெற்றிருக்கின்றவரும், **'வானப் பிரஸ்தாஸ்ரம வாழ்க்கை'**யைத் தம்மிச்சையாக ஏற்றுக்கொள்ள வேண்டிய வயதினைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே அடைந்துவிட்டிருந்தும் கூடப் பொதுத்தேர்தலில் தோல்வியைத் தழுவிக்கொள்ளுகின்ற வரையில் அதிகார போதையில் மூழ்கிக்கிடந்தவருமான முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனார், மேலே குறிப்பிட்டுள்ள கேள்வியைக் கேட்டிருக்கின்றார் என்றால், அவருடைய அறியாமையை அளவிடுவதற்கு ஏற்ற அளவுகோல் ஏது?

இந்த இடைத்தேர்தலில் கழகம் பங்குகொண்டிருப்பது, 'தனது சனநாயகக் கடமையை நிறைவேற்றுவதற்கே' என்ற பதிலைக் கூறினாலே போதும்—'ஏன் போட்டியிட வேண்டும்?' என்ற அவருடைய கேள்விக்கு! ஆனால், இந்த இடைத்தேர்தலில் கழகம் பங்கு கொள்ளுவதையும், 'இந்திரா காந்தியின் ஆட்சியை மாற்றுவது' என்ற துளியும் தொடர்பில்லாத புதுப் பிரச்சினையையும் பக்தவத்சலனார் இணைத்துக் காட்டி, 'ஏன் போட்டியிட வேண்டும்?' என்ற கேள்வியைக் கேட்டிருப்பதால், 'சனநாயகக் கடமை' எனப் பதிலளிப்பதை, போதிய விளக்கமாக அந்த முதியவர் கொள்ள மாட்டார்! எனவே, மிதமிஞ்சிய பதவி வெறியினால் வறண்டு போயிருக்கக்கூடிய அவருடைய மனத்தைத் துளைக்கத்தக்க விளக்கத்தைத்தான் தந்தாக வேண்டும்.

பொதுத்தேர்தலில், தமிழகத்தில் மொத்தம் 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரசுக் கட்சி, மூன்று தொகுதிகளில் மட்டும்தான் வெற்றிபெற்றது ; இதன் விளைவாக, 'காபினெட் ராங்க்' பெற்ற மத்திய அமைச்சராகத் தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரசுக் கட்சியினர் எவரும், இந்திரா அமைச்சரவையில் இடம் பெறுவதற்கு இல்லாமல் போய்விட்டதே—மத்திய அமைச்சரவையில் தமிழகத்துக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விட்டதே—என்ற கவலையை இம்முதியவர் உட்பட காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் கிளப்பினர்!

இவ்வாறு கிளம்பிய கவலையிலிருக்கின்ற நியாயத்தை நன்கு உணர்ந்த அறிஞர் அண்ணா அவர்கள்—தமக்கு இயல்பாக உள்ள அரசியல் பெருந்தன்மையின் விளைவாக, 'காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த தகுதிவாய்ந்தவர் எவராவது தென் சென்னை இடைத் தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால், தி. மு. க. சார்பில் எவரையும் வேட்பாளராக நிறுத்துவதில்லை' என்ற கருத்தை, தம்மிச்சையாக அறிவித்தார். அண்ணா அவர்களின் நற்கருத்தை—நன்றி தெரிவிக்க வெட்கப்பட்டாலும்—மறு பேச்சில்லாமல், காங்கிரசுப் பெரியவரை ஏற்றுக்கொள்ளச் செய்திருக்க வேண்டும் -- இம்முதியவர் ; ஆனால், நடைபெற்றது என்ன?

அண்ணா அவர்கள் அரசியலில் கடைபிடித்துவருகின்ற உயர்ந்த பண்பையும், மேற்குறித்த நற்கருத்தை அறிவித்ததில் அவர் வெளிப்படுத்திய பெருங்குணத்தையும் புரிந்துகொள்ளத் திறனற்ற காங்கிரசுப் பெரியவர்,

> "இவரென்ன பிச்சை கொடுக்கிறாரா? இவரென்ன கொடுப்பது—நான் ஏன் ஏற்பது?"

எனக் கூறி, தமது அரசியல் அகம்பாவத்தை விளம்பரப்படுத்திக் கொண்டார்! அப்பொழுது இம்முதியவர் வாய் திறக்கவில்லை!

இந்த இடைத் தேர்தலுக்குத் துளியும் தொடர்பில்லாத 'இந்திரா அமைச்சரவையை மாற்றுவது -- மாற்றாமலிருப்பது' என்ற புதுப் பிரச்சினையை இப்பொழுது கிளப்பி, கழகம் போட்டியிடுவதை குறைத்துப் பேச இப்பொழுது கிளம்பியுள்ள இம்முதியவரை, இவ்வகையில் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறோம் ;—'முதியவரே! முற்றும் தெரிந்த சகலகலாவல்லவரே! இந்திரா காந்தியின் ஆட்சியை மாற்ற வேண்டும் என்ற கெடுமதியினால் தான் உங்களுடைய குருநாதரான காங்கிரசுப் பெரியவர்,—'தகுதி வாய்ந்த காங்கிரசுக் கட்சியினரை நிறுத்தினால் தென் சென்னை இடைத் தேர்தலில் கழகம், தன் வேட்பாளரை நிறுத்துவதில்லை' என அன்று எம் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தந்த நல்வாக்கை—அப்பொழுது, 'நெஞ்சினாலும் தீண்ட முடியாது' என வீரம் சொட்டச் சொட்டப் பேசினாரா? பதவியைப் பறிகொடுத்துப் பரிதவிக்கும் பெரியவரே! மீஞ்சூர் முதியவரே! திருவாய் திறந்து, தெளிவு பெற விளக்கம் தருவீரா?'

தென் சென்னை இடைத் தேர்தலில் கழகம் பங்கு கொள்ளுவதற்கும்—'இந்திரா காந்தி ஆட்சி நீடித்திருக்க வேண்டும்' என ஏற்கனவே அண்ணா அவர்கள் கூறியுள்ளதற்கும் துளியும் தொடர்பு கிடையாது. ஏதோ தொடர்பு இருப்பதாக முன்னாள் முதலமைச்சர் ஒப்பாரி வைத்திருப்பது, பொருந்தாப் பொய்யுரை ஆகும்.

—கா. க.

மனித குலம் உய்ய ஐ. நா. செய்யும் அருந் தொண்டு!

22 ஆண்டுகளாக உலக சமாதானக் கொடியைத் தூக்கிப்பிடித்து வருகிறது

வானொலியில் அறிஞர் அண்ணா பாராட்டுரை

"ஐ. நா. அமைப்பு பலவீனமடைந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம், நாம் பலவீனமாயிருப்பதுதான் ; நாடுகள் பலவீனமாயிருப்பதுதான் ; அவை, கொள்கை பலமற்றவையாய் இருப்பதுதான் ; அவை, நேர்மையற்றவையாய் இருப்பதுதான்!

"நமது மன உறுதியும் பலமும் மட்டுமே மனித குலத்தின் நம்பிக்கைக்கு—உலக நீதியின் அரணுக்கு உயிர் நாடியாக இருக்க முடியும்!

"இந்நாட்டிலுள்ள நாமும், ஐ.நா.-வைப் பலப்படுத்த உத்தேசித்திருக்கிறோம். இந்த நிறுவனத்தின் பின்னணி - வரலாறு - அமைப்பு ஆகிய விவரங்கள் அனைத்தையும் மக்கள் அறிந்து கொள்ளும்படிச் செய்வது அவசியம்.

"சமாதானத்தையும் நீதியையும், இணக்கத்தையும் மகிழ்ச்சியையும், மறுக்க முடியாத ஓர் இலட்சியத்தையும் பிரச்சாரம் செய்யும் தனிமையான - ஆனால் தோல்வியடையாத இந்த அமைப்பையும், அதில் பொதிந்துள்ள கொள்கையையும் அனைவரும் பின்பற்றினால் அதை, 'மனித குலத்துக்கான மாபெரும் அமைப்பு' என வாழ்த்தி வரவேற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

"தமிழர்களாகிய நமக்கு, இரண்டாயிரம் ஆண்டுகளு[illegible]ன்பே 'யாதும் ஊரே—யாவரும் கேளிர்' என்று நமது [illegible] பாடி இதைத்தான் கற்பித்தார் ; ஆகையால் நாம் இந்[illegible] நிறுவனத்துக்கு உறுதுணையாக நின்று—வழிவழியாய் வந்த நமது இலட்சியத்தை எய்துவதில் உதவிபுரிவோமாக!"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், சென்னை வானொலியில் 23—10—67 அன்று உரையாற்றுகையில் குறிப்பிட்டார். ஐ நா. நிறுவனத்தின் 22-ம் ஆண்டு விழா நாளையொட்டி அவர் ஆற்றிய உரையின் சுருக்கமாவது :—

நைல் நதிக் கரையிலும், இஸ்ரேலை அடுத்துள்ள பாலை நிலத்திலும் போர் மூண்ட கொஞ்ச காலத்துக்குள்ளாகவே நாம் ஐ. நா. தினத்தைக் கொண்டாடுவது விந்தையல்ல; ஆனால், அதில் ஆழ்ந்த கருத்து இருக்கிறது ; ஐ நா.-வுக்குப் பக்கபலமாக இருந்து அதற்கு உறுதியும் ஆதரவும் தேடுவதில் நாம் உறுதியாயிருப்பதை இது காட்டுகிறது.

ஏனென்றால், உன்னத இலட்சியமுள்ள ஒரு நிறுவனத்தை அதன் தோல்விகளைக் கொண்டு குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அந்த நிறுவனத்தின் அடிப்படை உணர்ச்சியைக் கொண்டும், அதன் மூலம் ஏற்படும் நம்பிக்கையைக் கொண்டும்தான் அதை அளவிடவேண்டும்.

ஐக்கிய அரபுக் குடியரசுக்கும்—இஸ்ரேலுக்கும் இடையே மோதல் ஏற்படாமல் ஐ. நா.-வால் தடுக்க முடியவில்லை என்பதும், வியத்நாம் போரை முடிவுக்குக் கொண்டுவர அதனால் இயலவில்லை என்பதும் உண்மையே. ஐ. நா. செயலற்றுவிட்டது என்று நிரூபிப்பதற்குச் சில சம்பவங்களை எடுத்துக் காட்ட இயலும் ; அத்தகைய சம்பவங்களைச் சிலர் எக்களிப்போடும், வேறு சிலர் வேதனையோடும் சுட்டிக்காட்டவும் செய்கிறார்கள். ஆனால் எங்கேயாவது மோதலோ, வலுத்தாக்குதலோ, துவேஷமோ இருந்தால் உலக மக்களெல்லோரும் ஐ. நா.-வையே நினைத்துக் கொள்கிறார்கள் என்பது முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விஷயமாகும். இது ஓர் அற்புத உண்மை. ஏனென்றால் பல நாடுகளைச் சேர்ந்த மக்களின் இதயத்தில் நம்பிக்கை ஒளியை ஊட்டும் ஓர் அமைப்பாக ஐ. நா. விளங்குவதை இது காட்டுகிறது.

உலக மக்கள், ஐ. நா. நிறுவனத்தை, சமாதானத்துக்கும் நல்லுணர்வுக்குமான ஒரே கருவியாகவும், போரையும் ஆக்கிரமிப்பையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நம் வசம் உள்ள ஒரே நிறுவனமாகவும் கருதுகிறார்கள்.

உலக அமைதியும் நல்லுணர்வும் மிக மிக அவசியம் என்பதில் நமக்குள்ள நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்வதன் மூலம், ஐ. நா.-வை வலுவாக்க வேண்டும் ; இதற்காகவே ஐ.நா. தினம் கொண்டாடுகிறோம்.

கலைஞன் வாசிக்காவிட்டால்கூட, யாழ் யாழ்தான்! அதுபோலவே, பட்டை தீட்டாவிட்டாலும் வைரம் வைரம்தான்!

உன்னதக் குறிக்கோளுடன் இன்று ; நம் வசம் உள்ள ஒரே நிறுவனம், ஐ. நா. ஆகும். அதன் தோல்விகளும் பலவீனங்களும், அந்த நிறுவனத்தின் அவசியத்தையோ, முக்கியத்துவத்தையோ குறைக்கவில்லை—குறைக்கவும் முடியாது.

அதேசமயம், சுற்றிலும் விபரீத எண்ணங்களும், அணு ஆயுதங்களும், பேராசைக் கண்களும், ஆக்கிரமிப்பு நோக்கமும் கொண்ட நாடுகள்—வஞ்சகப் பேச்சாலும், மிரட்டலாலும் மற்ற நாடுகளை அடிமைப்படுத்த நினைக்கும் நாடுகள்—நிறைந்திருக்கையில், இந்த நிறுவனம், 'அமைதிக்காகவே திட்டமிட்டு அமைதிக்காகவே விண்ணப்பம் விடுக்கிறது' என்றால், இந்த நிலைமை, அனைவருக்கும் பெருமதிப்பைத் தருவதாகும்.

படைக் கலங்களும், படை அணி வகுப்புக்களும், படைத் தலைவர்களும், இராசதந்திரிகளும், அணு குண்டுகளும், ஹைட்ரஜன் குண்டுகளும் நிறைந்த ஓர் உலகத்தில் ஐ. நா. செயலாற்றி வருகிறது!

மனித மனத்தில் இயல்பாக உள்ள கண்ணியத்தைத் தூண்டுவதற்கு அது நம்பிக்கையோடு முயன்று வருகிறது!

அரியதொரு சேவை ஆர்வத்துடன் இந்த நிறுவனம் சென்ற 22 ஆண்டுகளாக உலக சமாதானக் கொடியைத் தூக்கிப் பிடித்துவந்திருக்கிறது!

மனிதனை மிருகமாக்குவதும், சோலைவனங்களைப் பாலைவனங்களாக்குவதும், நகரங்களைச் சிதைவுகளாக்குவதும், சுபிட்சத்தை வறுமையாக்குவதும் ஆக்கிரமிப்பாளரைத் தவிர வேறு யாராகத்தான் இருக்க முடியும்?

இத்தகையதோர் ஆக்கிரமிப்பாளரைக் கண்டுபிடிப்பதுதான் ஐ. நா.-வின் நோக்கம் ; ஏனென்றால், அவன் தனது உருவத்தையும், சொல்லையும் மாற்றக்கூடிய கபடமானவன்!

அவனைக் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்து — மற்றவர்களின் நல்லெண்ணத்தால் கிடைக்கும் ஆற்றலைச் சேர்த்து—அவனை இந்த முயற்சியிலிருந்து தடுக்கும்பொருட்டு ஐ. நா. விழிப்புடன் இருக்க வேண்டும் ; இது எளிதான காரியமல்ல ; அபாயங்கள் பல நிறைந்த ஒரு வேலை! ஆற்றலும் தியாகமும் தேவைப்படும் ஒரு வேலை இது!

தோல்விகளும், கண்டனமும், குற்றச்சாட்டுக்களும் இருந்துங்கூட,

(3-ம் பக்கம் பார்க்க)

டூரிங் சினிமாக்களுக்கு அனுமதி கால நீடிப்பு

சென்னை, அக். 26—

டூரிங் திரையரங்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு உரிமம் அளிப்பதென்று தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

கீற்றுக் கொட்டகைகளைக் கொண்டு ஏற்படுத்தப்படும் திரை அரங்குகளுக்கு ஐந்தாண்டுக் காலத்திற்கு உரிமம் வழங்குவதென அரசு முடிவு செய்துள்ளது" என அமைச்சர் சத்தியவாணிமுத்து செய்தியாளர்களிடம் கூறினார்.

மனித குலம் உய்ய...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்தை ஏற்று நடத்த வேண்டிய படைவீரர்கள் இருக்கிறார்கள் என்பதை இதன் 22 ஆண்டுக்கால வாழ்க்கை தெளிவாக்குகிறது! நல்லுள்ளங்களுக்கு இது நம்பிக்கை அளித்திருக்கிறது!

மனிதனின் நன்னெறிகளை மறுக்கிறது போர்! அறிஞர்களும், இராசதந்திரிகளும், கவிஞர்களும், மதக் குருக்களும்—எல்லாவற்றுக்கும் மேலாக வெற்றிநடை போட்டுவரும் படைத் தளபதிகளும் போரைக் கண்டிக்கிறார்கள்; 'போர் கொடியது; மனித கௌரவத்தை மறுக்கிறது' என்றும் அவர்கள் கண்டனம் செய்கிறார்கள்; இருப்பினும், போருக்குப் பின் போர் ஏற்பட்டது! ஏனென்றால், போர்க்களத்தை விட சிறந்ததோர் அரங்கு இருக்கவில்லை! தகராறைத் தீர்ப்பதற்கு வேட்டுச் சத்தத்தை விடச் சிறந்ததொரு வாக்குவாதம் இருக்கவில்லை! தகராறைத் தீர்த்து உரிமையை நிலைநாட்ட வேறுவழி இருக்கவில்லை!

ஐ. நா. நிறுவனம் இன்றைய அரங்காக விளங்குகிறது; இது முற்றிலும் போதுமானது' என்று சொல்ல முடியாது; ஆனால், பேச்சுக்களினாலும், அதன்படி நடந்து செயல் புரிவதனாலும் போரைத் தவிர்த்து தகராறைத் தீர்ப்பதற்கும் ஒரே அரங்காக இருக்கிறது! உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், உலக மக்கள்முன் தங்கள் நிலையை எடுத்துக் கூறுகிறார்கள்! மனிதர்களைக் கொலை செய்வதற்குப் பதிலாகத் தங்கள் நிலைக்காக வாதாடுகிறார்கள்!

உறுப்பு நாடுகள் தங்களுக்கிடையேயான உறவு முறைகளில் பின்பற்ற வேண்டிய நெறியை ஐ. நா. வகுக்கிறது!

ஐ. நா.-வை வலுப்படுத்தி அதற்குப் பக்கபலமாக நிற்குமாறு ஒவ்வொருவருக்கும் வேண்டுகோள் விடுப்பதற்காகவே இன்றைய தினத்தைக் கொண்டாடுகிறோம்.

ஐ.நா. நிறுவனம் வலிமையற்றது ஆதலால் அதைப் பராமரிக்க வேண்டாம் என்று வாதாடுவது, அந்தக் கண்ணையும் குருடாக்குவதற்கு ஒப்பாகும். பிறகு இருளில் அலைந்து திரிந்து அழிவைத்தான வரவேற்க வேண்டியிருக்கும்!

ஐ. நா. நிறுவனம் பலவீனமாக இருந்தும்கூட பல பகுதிகளில் போரைத் தடுத்திருக்கிறது; தகராறுகளைப் பரவவிடாமல் தடுத்திருக்கிறது; அமைதியைத் துரிதமாக நிலைநாட்டி இருக்கிறது; ஆத்திரமடைந்த நாடுகளுக்கு ஆறுதல் சொல்லி அமைதியூட்டுவதற்காகக் காவல் நிலைகளையும், திட்டங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது!

இந்த நிறுவனத்தின் தடுப்புச் சக்தியானது, நமது ஆதரவைப் பெற்றுவிட்டிருக்கிறது; சுகாதாரம்—கல்வி—மனித உரிமைகள்—சுதந்தரம், ஆகியவற்றுக்கான பல்வேறு பிரிவுகள் மூலம் இந்த நிறுவனத்துக்குள்ள குணப்படுத்தும் சக்தியானது, நமது அன்புக்குப் பாத்திரமாகிவிட்டிருக்கிறது.

போதிய ஆதாரவசதிகள் படைத்திராத நாடுகளுக்கு உதவிபுரிந்து வழிகாட்டுவதற்காகவும், அவற்றை வளப்படுத்துவதற்காகவும் அண்டை நாடுகளும் சரி—எங்கே இருக்கும் நாடுகளும் சரி

மீண்டும்

நாணய மதிப்புக் குறைப்பா?

அயல் நாட்டு நிறுவனங்கள் அச்சம்

புதுடில்லி, அக். 27—

இந்நாட்டில் முதல் போட அயல் நாட்டினர், போதிய அக்கறை காட்டாதிருக்கும் காரணங்களை உலக பாங்கியும், உதவியளிக்கும் நாடுகளும் இப்போது ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது.

"இந்திய அரசு இரண்டாவது முறையாக ரூபாய் மதிப்பைக் குறைத்துவிடும் என்ற அச்சம், அயல் முதலீட்டாளரை விரட்டுகிறது" என்று, இங்குள்ள தூதரக வட்டாரங்கள் கூறுகின்றன.

இரண்டாவது முறையாக நாணய மதிப்பு மாற்றப்படலாம் என்பது குறித்து யூகித்து வந்த இங்குள்ள அயல்நாட்டுத் தூதுவர்கள், 'அவ்வாறு' நேரிடலாம் என்று தத்தமது அரசுகளை எச்சரித்துள்ளனர்.

இதனால், அயல் நிறுவனங்கள் இந்தியாவில் முதல் போடுவதைப் பற்றிக் கேட்கும் விசாரணைகள் குறைந்துவிட்டன.

மீண்டு[illegible] நாணய மதிப்பைக் குறைத்[illegible] தமது ஆதாயம் அயல் [illegible]வணி மதிப்பில் குறைந்துவ[illegible]மென்பதால், பெரும்பாலான அயல் நிறுவனங்கள் இங்கு முதல் போட விரும்பவில்லை.

இரண்டாவது முறை ரூபாய் மதிப்புக் குறைக்கப்படும் என்ற வதந்தியைப் போக்குவதற்கு அயல் நாடுகளிலுள்ள இந்தியத் தூதரங்கள் முயன்றன; உலக பாங்கியோ, வேறு எந்தப் பன்னாட்டு உதவிஅமைப்போ, நாணய மதிப்பைக் குறைக்க வேண்டுமென்று ஆலோசனை கூறவில்லை.

ரூபாயின் மதிப்பை மேலும் குறைக்கத்தலைநகரில் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான அறிகுறி எதுவுமில்லை.

"முதலில் செய்த நாணய மதிப்பு மாற்றத்தின் பலன்களை இன்னும் முழு அளவில் பெருதிருக்கையில், மீண்டும்; அதுபோன்ற நடவடிக்கையை எடுப்பது பயனற்றதாகும்" என்று இங்குள்ள அதிகாரபூர்வமான வட்டாரங்கள் கூறுகின்றன.

நிரம்ப அயல் செலாவணியைச் சம்பாதிப்பதற்காக ஏற்றுமதியை தூண்ட வேண்டும்; அயல் சந்தையில் கண் வைத்துக்கொண்டு பல்வேறு தொழில்களுக்கு மேலும் உதவியளிக்க வேண்டும்.

—எல்லா வாழ்க்கைத் துறைகளையும் சேர்ந்த நிபுணர் குழுக்களை அனுப்பிவைக்கின்றன!

எங்கெங்கே தேவை இருக்கிறதோ அங்கெல்லாம் மனிதனின் துன்பத்தை—அது, உடலை வாட்டும் துன்பமாக இருந்தாலும் சரி; மனத்தில் ஏற்படும் இன்னலாக இருந்தாலும் சரி—அதை அகற்றுவதற்கும் குறைப்பதற்கும், ஒழிப்பதற்கும் கைகொடுத்து உதவத் தயாராயிருக்கும்!

ஏழை மக்களுக்கு இயற்கை அன்னை அதன் செல்வங்களைக் கொடுக்கும்படி செய்வதற்கும் உணர்ந்துகொள்ளக் கூடியவர்களுக்கு வீரத்தைப் புகட்டுவதற்கும், நலிந்த மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்கும், எல்லாருக்கும் மனிதாபிமானத்தையும் காண்பிப்பதற்கும் தயாராயிருக்கும் ஐக்கிய நாடுகள் குழுவைக் காணலாம்.

ஐ. நா. நிறுவனத்தின் சமாதானம் காணும் முயற்சிகளில் ஆர்வமில்லாதவர்கள்கூட, மேம்பாடு குன்றிய — மேம்பாடடைந்து வரும் நாடுகளின் தேவைகளை நிறைவு செய்வதில், அதுபுரிந்து வருகின்ற பணியைப் பாராட்டத்தான் செய்கிறார்கள்."

★ மகாத்மாவின் மனத்திற்குகந்த திட்டம் கதர்!
★ வாழவகையில்லாத மக்களுக்கு வாழ்வளிப்பது கதர்!
★ நாட்டு மக்களின் வாழ்வு நலமுற கதரையே வாங்குங்கள்!
★ ஏழைகளின் வாழ்வு ஏற்றமுற கதரையே வாங்குங்கள்!

தமிழக அரசு கதர் -- கிராமத் தொழில் ஆயம்

உள்ளாட்சித்துறை அமைச்சரும், தமிழகக் கதர்—கிராமத் தொழில் ஆயத்தின் தலைவருமான திரு. மா. முத்துசாமி பி.ஏ.பி.டி. அவர்கள், கீழ்க்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் :—

"காந்தி அண்ணலவர்களின் விருப்பத்தின் விளைவாகத் தோன்றிய இக்'கதர்-கிராமத் தொழில் ஆயத்தில், இன்று தமிழகத்தில் இலட்சக்கணக்கான தொழிலாளர்களும், தாய்மார்களும் ஈடுபட்டுப் பாடுபட்டு வருகின்றனர். அவர்தம் வாழ்வு வளமுற—அண்ணலின் எண்ணம் நிறைவுற—அனைவரும் இத்தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவது அவசியமாகிறது."

(ஒ-ம்) மா. முத்துசாமி

தமிழகக் கதர்—கிராமத் தொழில் ஆயத்தின் துணைத் தலைவர் திரு. பி. என். பரமசிவம் எம்.எல்.ஏ. அவர்களுடைய வேண்டுகோள் :—

"தமிழகமெங்கும் கதர் விற்பனை நிலையங்கள் இயங்கிவருகின்றன. அக்டோபர் மாதத்தில் மேலும் பல இடங்களில், பொதுமக்கள் வசதியை முன்னிட்டு தற்காலிகமாகக் கதர் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டிலும், 2—10—1967 முதல் 1—11—1967 வரை பருத்தி ரகங்கள்மீது 20 சதவிகிதமும், பட்டு ரகங்கள்மீது 10 சதவிகிதமும் விலையில் விசேடத் தள்ளுபடி அளிக்கப்பட்டிருக்கிறது.

"ஆசிரியப் பெருமக்களும், அரசு மற்றும் எல்லாத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களும், மாணவ மாணவியரும், மற்றும் பொதுமக்களும், பெரும் அளவிற்குக் கதர் வாங்கி, கதர்த் திட்டத்தில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான நூற்போர்கள்—நெசவாளர்கள்—மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு நல்வாழ்வு தருவதோடு, நாட்டின் பொருளாதாரத்தைச் சீரமைக்க முன்வரும்படி கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் ஒவ்வொரு இல்லத்திலும் கதர் வாங்கி ஆதரவு கொடுக்க வேண்டும் என மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்."

தங்களன்புள்ள,

(ஒ-ம்) பி. என். பரமசிவம்

'பெரிய'வர்கள் செய்யத் தவறிய எளிய காரியங்கள்!

'சிறிய'வர்களான எங்கள் கண்ணுக்கு தென்படுகின்றன

கூவம் சீரமைப்பு --- காவிரி நீர்த் திட்டங்களை நிறைவேற்றக் கழகம் காட்டும் அக்கறை --- அறிஞர் அண்ணு விளக்கம்

சென்னைச் சீரணியினர் மேற்கு மாம்பலத்தில் சாலையமைக்கும் பணியைத் துவக்கிவைத்து முதலமைச்சர் அறிஞர் அவர்கள், ஊருக்கு உழைப்பவர்களின் கடமைகளை வலியுறுத்தினர்.

கூவம் ஆற்றுச் சீரமைப்புத் திட்டத்தாலும், காவிரி நீர் கொணரும் திட்டத்தாலும் சென்னை நகருக்கு ஏற்படவிருக்கும் நற்பலன்களை விளக்கினர்; அவர் கூறியதாவது :—

'ஊருக்கு உழைப்பது' என்ற இயற்கைப் பண்பை ஒன்றுபடுதத வேண்டும்; 'இன்னின்ன பணிகளை மேற்கொண்டால் நல்ல பலன்களைக் காணலாம்' என்ற உணர்வை ஊட்டவேண்டும்; தேவையான கருவிகளைக் கொடுக்க வேண்டும்; சரளைக் கற்கள்—உருளைகள் கிடைக்கவில்லையென்றால், அவை கிடைக்கச் செய்ய வேண்டும்; இவைகளுக்கெல்லாம் அரசு அதிகாரிகள் ஒத்துழைக்க முன்வர வேண்டுமென நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பண்டித ஜவகர்லாய் நேரு, இத்தகைய பொதுநலக் தொண்டு குறித்துக் கனவு கண்டார்! 20 ஆண்டுகளாக மக்களும்தான் உழைத்திருக்கிறார்கள்! காரணம் தெரியாமலே உழைத்திருக்கிறார்கள்! 'யாருக்காக உழைக்கிறோம்' என்பதைத் தெரிந்து கொள்ளாமலே உழைத்திருக்கிறார்கள்! 'பலனென்ன' என்று தெரியாமலே உழைத்திருக்கிறார்கள்!

நமக்காக—நம் குடும்பத்துக்காக உழைக்க வேண்டும்; மீதமிருக்கும் நேரத்தில் ஊர் நன்மைக்காக உழைககவேண்டும்!

கோட்டையிலே வீற்றிருக்கும் எங்களுக்கு, 'மக்களின் குறைகள் என்னென்ன என்று தெரிந்துவிடும்' என்று எண்ணி இருந்துவிடாமல், அப்போதைக்கப்போது உள்ள குறைகளை எடுத்துக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அப்படிக் கூறும்போது — ஒவ்வொரு நாணயத்துக்கும் உபகரணங்கள் இருப்பதுபோல் ஒவ்வொரு நாணயத்துக்கும் இரண்டு பக்கங்கள் உண்டென்பதை மனதிற்கொண்டு கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'கூறுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க முயலுவேன்' என்பதைப் பணிவன்போடு அதே சமயத்தில உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர்த் தட்டுப்பாடு இயற்கையாக ஏற்பட்ட ஒன்றாகும்! ஐந்தாறு இலட்சம் பேர் வாழ்ந்த சென்னைக்கென்று வகுக்கப்பட்டது, இப்போதுள்ள தண்ணீர்த் திட்டம! இப்போது, 22 இலட்சம் பேர் இந்நகரில் வாழ்கிறார்கள்!

நாகரிகமான—ஓரளவு வசதியோடு கூடிய வீடுகளில் இலட்சம் பேர் வாழககூடும்; மாளிகைகளில் மற்றோர் இலட்சம் பேர் இருக்கக்கூடும்; நாலு குடித்தனம்—ஐந்து குடித்தனம் என்றுள்ள வீடுகளில் ஐந்தாறு இலட்சம் பேர் இருப்பார்கள்; மற்றுமுள்ளோர், எங்கெங்கெல்லாமோ வாழ்கிறார்கள்!

நான் யாரையாவது அழைத்து, 'அந்தக் கூவம் நதியோரம் போய் குடியிரு' என்றால், என் கன்னத்தில் அறைவான்! ஆனால், யாரும் சொல்லாமலே அங்கே அவர்களாகவே வாழுகிறார்கள்! 'நாற்றமாயிற்றே' என்றால், 'ஏதோ ஒரு நாளில் அரை மணி—கால் மணி நேரம் அப்படியிருக்கும்' என்கிறார்கள்! இவர்கள் இப்படி—குடியிருப்புக்காக வேண்டி—இருக்கும் நாற்றத்தையும் 'இல்லை' என்கிறார்கள்!

இவர்களது குடிசைகளை வெளிநாட்டார் பார்த்தால், நம்மைப் பற்றி மிகத் தாழ்வான கருத்தைக் கொள்வார்கள்; ஆகையினால்தான், கூவத்தின் நாற்றத்தைப் போக்கி—சேற்றை வாரிக் கூவத்தை எழிலுடையதாகச் செய்திடத் திட்டமிட்டுள்ளோம்!

இலண்டனுக்கு நான் போனதில்லை; போய் வந்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்; இலண்டன் நகருக்கு அழகைக் கூட்டுவது அந்நகரின் பெரும் பகுதியில் ஊடுருவிச் செல்கிற தேம்ஸ் நதி என்பதாகும். அதுபோல் கூவம், சென்னை நகரின் மையப் பகுதியில் இருக்கிறது.

ஏனோ இந்த எளிய திட்டம், என்னைவிடப் பெரியவர்கள்—வல்லவர்கள் ஆண்ட நாட்களில் செய்யப்படாமலே இருந்தது! 'எளிய காரியம்தானே' என்று இருந்துவிட்டார்கள் போலும்! நாங்கள் சின்னவர்களென்பதால், சிறிய விஷயங்களெல்லாம் எங்கள் கண்ணுக்குப் படுகிறது!

கூவம் ஆற்றைச் சுத்தப்படுத்தும் அப்பணியின் மூலம் நோய்நொடிகள் நீங்கும்! சுகாதாரம் ஓங்கும்!

இதைப்போலவே காவிரிநீர்த் திட்டம், நீண்ட நாட்களாகப் பேசிப் பேசி நிறுத்தப்பட்டதே தவிர, நடைமுறைக்கு வரவில்லை! அது இப்போது நிறைவேற்றப்படவிருப்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும். இனி, பல புதிய தொழில்களுக்குத் தேவையான தண்ணீரும் கிடைக்கும்.

தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் கொடுக்கிறோமென்றால், பணம் வாங்கிக்கொண்டுதான் கொடுக்கிறோம்!

அதுபோல, சென்னைத் துறைமுகத்துக்கு வருகிற கப்பல்களுக்கும் தண்ணீர் நிரம்பத் தேவைப்படுகின்றது; போதுமான தண்ணீர் இருந்தால் நாம் கொடுக்கலாம்; இப்படி விலைக்கு விற்பதன் மூலம் மட்டும் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்வரை வருமானம் கிடைக்கும். இப்போது பணத்தைச் செலவிட்டு நாம் செய்தாலும், கிடைக்கிற வருவாயைக் கொண்டு அதைச் சரிக்கட்டலாம் என்பதோடு, இந்தக் காவிரி நீர்த் திட்டம், இன்னும் பத்தாண்டுகளில் இலாபகரமானதாகவும் ஆகிவிடும்."

ஐயோ பாவம்-- காமராசர்!

சொல்லி வாய்மூடுவதற்குள் டில்லியிலிருந்து மறுப்பு!

'கொள்முதல் விலையை உயர்த்துவதற்குத் தி.மு.க. அரசு தடையாக இருக்கிறது' என காமராசர் தலைமையில் காங்கிரசுக்காரர்கள்இடைவிடாதுசொல்லி வந்தனர்!

சென்னைக்கு வருகை தந்திருந்த மத்திய உணவமைச்சர் செகசீவன்ராமிடம் செய்தியாளர்கள் இதுபற்றிக் கேட்டனர்—'காங்கிரசுத் தலைவர் காமராசரே கூறுகிறாரே' என்று சுட்டிக் காட்டினர்.

"கொள்முதல் விலை யாரால்—எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்ற விவரம் தெரியாததால், காங்கிரசுத் தலைவர் காமராசர் அப்படிச்சொல்லியிருக்கக்கூடும் கொள்முதல் விலையை உயர்த்துவதற்குத் தமிழக அரசு தடை இருப்பதாகச் சொல்வது சரியல்ல" என்று மறுத்துரைத்தார் செகசீவன்ராம்!

தங்கள் கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரும் மத்திய அரசின் உணவுத் துறைப் பொறுப்பை வகிப்பவருமான ஒருவர் சொன்ன பின்பும், உண்மையை உணர மறுத்து, மீண்டும் வாய்ப்பறை கொட்டி வந்தனர் தமிழகக் காங்கிரசுக்காரர்கள்!

"மத்திய அரசு நிர்ணயித்த விலைகளுக்கு மேல் கொள்முதல் விலையை அதிகரித்துக்கொடுக்க மாநில அரசுகள் விரும்புமானால் அவ்வாறு செய்யலாம்" என்று மத்திய உணவமைச்சர் பேசியதாக ஒரு தவறான செய்தி சில ஏடுகளில் வெளியானதும், 'பார், பார்; செகன்சீவன்ராமே கூறிவிட்டார்' என்று காமராசரே போர்க்கோலம் பூண்டார்!

ஆனால், மத்திய உணவு அமைச்சர் பேசியது என்னவென்பதை விளக்கி, மத்திய உணவுத்துறை ஒரு செய்தி வெளியிட்டுள்ளது; அது வருமாறு:—

"கொள்முதல் நெல்லுக்கு மத்திய அரசு அறிவித்துள்ளதைக் காட்டிலும் அதிக விலையை மாநில அரசுகள் விரும்பினால்கூட தரமுடியாது."

"கான்பூரிலிருந்து உணவு அமைச்சரின் பெயரால் வெளியான பத்திரிகைச் செய்தி சரியானதன்று; 'சர்க்கரை ஆலைகள் விரும்பினால், நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிக விலையைக் கரும்புக்குத் தரலாம்' என்று மட்டுமே உணவு அமைச்சர் கூறினார்; அது உணவுப் பொருள்களுக்குப் பொருந்தாது!

இன்று டில்லியிலிருந்து மற்றொரு செய்தி வருகின்றது; திட்டக் குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் டி. ஆர். காட்கில், வானொலி பேட்டி ஒன்றில் பின் வருமாறு சொல்லியிருக்கிறார்:--

"இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலை, மிகப் பெரும்பாலான இடங்களில்—வெளிச் சந்தையில் உள்ள விலைகளைக் காட்டிலும் அதிகமாகவே உள்ளது; 'விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கக் கூடியதாக இந்த விலைகள் இல்லை' என்று புகார் வர நியாயமில்லை."

குன்னத்தூர் க. அன்பரசு

சுற்றுப்பயணம்

நவ. 1, 2, 3: தென் சென்னை; 4: வேலாயுதம்பாளையம்; 5: கரூர்; 6: உடுமலை; 11: கொளப்பலூர்; 12: உடுமலை வட்டம்; 14: கொளாநள்ளி; 19: ஈரோடு வட்டம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, [illegible]) [illegible]

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

28--10--67

சென்னை 89-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு இராமகிருட்டிண நகரில்; தலைவர்: மா. செ. நாதன்; பேசுவோர்: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ., முரசொலி மாறன், எஸ். வி. வேலு, டி. கே. கபாலி, பி. டி. இராகவன், எஸ். கே. மூர்த்தி, ஆர். வி. இராசன்.

சென்னை 100-வது வட்டம்

பகுத்தறிவு மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: அ. ச. அரங்கண்ணல்; பேசுவோர்: அறிஞர் அண்ணா, முரசொலி மாறன் எம்.ஏ., க. இராசாராம் பி.ஏ., எம்.பி., வி. முனுசாமி எம்.சி., எச். வி. ஹண்டே எம்.எல்.ஏ., சைதை சம்பந்தம் எம்.சி., ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., சி. பி. பவளவண்ணன், எம். குமார்,

29--10--67

திண்டுக்கல்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு; தலைவர்: ப. மருதை; பேசுவோர்: கே. என். இராமச்சந்திரன் எம்.ஏ., எம்.எல்.ஏ., இரெ. கரிகாலன், பெ. கிவானந்தம்.

சிவகாசி

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு பூங்காத்திடலில்; தலைவர்: எம். வீரப்பன்; பேசுவோர்: க அன்'ழகன் எம்.ஏ.,எம்.பி.. எஸ். ப்.மணியம், ஆ. கந்தசாமி, சே. அ. ரசாக், கே. வி. கே. இராசன், ச. ஆறுமுகம்.

புதுவை

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு ஒதியஞ்சாலைத் திடலில்; தலைவர்: கவிஞர் ச. கிவப்பிரகாசம்; பேசுவோர்: மு. சாத்தையா எம்.ஏ.. வழக்கறிஞர் சு. பெருமாள், எம். ஏ சண்முகம், கே. ஏ. சலீல், கோ. புகழேந்தி, கோ. தென்னன்.

மதுரை

தி. மு. க. கலைஞர்கள் மன்றச் சார்பில் 6-மணிக்கு முனிச்சாலை இசுமாயில்புரம் 9-வது எண் சந்தில்; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., சி. தமிழரசி பி.ஏ.

காங்கேயநல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: டி. வி. இராசாமணி; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., மா. பா. சாரதி எம்.எல்.ஏ., ஜி. நடராசன் எம்.எல்.ஏ., தோப்பூர் திருவேங்கடம் எம்.ஏ., பி. கே. முனுசாமி, வி. எஸ். பாண்டியன், வி. ஏ. இளஞ்செழியன்.

தென்சென்னை

கிளைக் கழகத் தோழர்களுக்கு:

"தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவதற்காகத் தேதி வாங்கிச் சென்றுள்ள கழகத் தோழர்கள், கூட்டம் நடைபெறும் இடம்—கலந்து கொள்ளும் தலைவர்கள் — கூட்டம் நடைபெறும் தேதி ஆகிய விவரங்களை, முன்னாள் மாவட்டச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்களிடம் 'அன்பக'த்தில் தொடர்பு கொண்டு, 28—10—67-க்குள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

மாநகராட்சி விழா நிகழ்ச்சிகள்

பள்ளித் திறப்பு--அண்ணா, முரசொலி மாறன் பங்கேற்பு

சென்னை 97-வது வட்டம் சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலையில் உள்ள மாநகராட்சி நடுநிலைத் துவக்கப் பள்ளியின் கட்டிடத்தை அறிஞர் **அண்ணா** அவர்கள் திறந்துவைப்பார்கள்; இந்த விழா 28—10—67 மாலை 6-30 மணிகக்கு மேயர் இரா. சம்பந்தம் தலைமையிலும்—முரசொலி மாறன் எம்.ஏ. முன்னிலையிலும் நடைபெறும்; வரவேற்பு: சைதை சம்பந்தம் எம்.சி.

துப்புரவு ஆய்வாளர் கட்டிடத் திறப்பு

சென்னை 36-வது வட்டம் பெரம்பூர் பாரக்ஸ் சாலையில் உள்ள துப்புரவு ஆய்வாளர் அலுவலக முதல் மாடிக் கட்டிடத்தை 28—10—67 மாலை 5-மணிக்கு தமிழக சுகாதார அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா திறந்துவைப்பார்; மேயர் இரா. சம்பந்தம் தலைமைவகிப்பார்; வரவேற்பு: க. அன்பிற்கரசன் எம்.சி. (வட்டக் குழுத் தலைவர்), சு. பாலன் (வட்ட உறுப்பினர்).

தாய் -- சேய் நலத் திட்டப் பொன் விழா

சென்னை மாநகராட்சி தாய்-சேய் நலத் திட்ட வாரத் துவக்கவிழா, 28—10—67 காலை 10 மணிகக்கு நேரு விளையாட்டரங்கில் நடைபெறும்; மேயர் இரா. சம்பந்தம் தலைமைவகிப்பார்; அமைச்சர் சாதிக்பாட்சா துவக்கிவைப்பார்; அமைச்சர் திரு. முத்துசாமி பொன் விழா மலரை வெளியிடுவார்; டாக்டர் வீரசிங்கே சின்னப்பா பொருட்காட்சியைத் திறந்துவைப்பார்; வரவேற்பு: இரா சடகோபன் (மத்தியக் குழுத் தலைவர்).

தேர்தல் பிரச்சார ஊர்வலங்கள்

வட சென்னையிலிருந்து:

"தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் முரசொலி மாறனை ஆதரித்து பி. கே. மாரியப்பன் தலைமையில்—டி. வெங்கடேசன் எம்.சி., மு. பாண்டியன், கு. இராமலிங்கம் எம்.சி. முன்னிலையில், 29—10—67 காலை 9-மணிக்கு 'அறிவகத்'திலிருந்து தேர்தல் பிரச்சார சைக்கிள் சிறப்பு ஊர்வலம், மு. வேதாசலம் எம்.எல்.ஏ. துவக்க—புறப்பட்டு, தென் சென்னை முக்கிய வீதிகள் வழியாகச் சென்று, முரசொலி அலுவலகத்தில் முடிவடையும்; கழக தோழர்களும், தோழமைக் கட்சியினரும் கொடியுடன் வர வேண்டுகிறேன்"

என்று, வண்ணைப் பகுதிச் செயலாளர் பி. கே. மாரியப்பன் அறிவிக்கிறார்.

திருவான்மியூரிலிருந்து:

"தென் சென்னைத் தொகுதி நாடாளுமன்ற வேட்பாளர் முரசொலி மாறன் அவர்களை ஆதரித்துத் திருவான்மியூர் தி. மு. கழகத் தோழர்கள், துரை சண்முகம் (செயலாளர், அடையாறு டிரான்ஸ்பார்மர் சுவிட்ச் அண்டு கீர் தொழிலாளர் சங்கம்) தலைமையில் 29—10—67 காலை 8-மணிக்கு புறப்பட்டு [illegible]யாறு பகுதியிலுள்ள வா[illegible]ர்களைச் சந்தித்து வாக்குக்[illegible]பார்கள்; தேர்தல் பிரச்சார[illegible] செய்வார்கள்"

என்று செயலாளர் ந. நடராசன் அறிவிக்கிறார்.

தேர்தல் பிரச்சார நாடகம்

முரசொலி மாறன் அவர்களை ஆதரித்து சென்னை 58-வது வட்டம் எம். ஜி. ஆர். மன்றச் சார்பில்

29-10-67 ஞாயிறு இரவு 8-மணிக்கு

பார்டர் தோட்டம் (ஜானிபாட்சா தெரு) திறந்தவெளியரங்கில்

உணவமைச்சர்

திரு. கே. ஏ. மதியழகன்

அவர்கள் தலைமையில்

முரசொலிநாடகமன்றம் அளிக்கும்

திரு. மு. கருணாநிதியின்

'காகிதப்பூ'

(புதிய மாற்றங்களுடன்)

சிறப்புரை:

சி. பா. ஆதித்தனார்
சிட்டிபாபு
அன்பில் தர்மலிங்கம்
நீலநாராயணன்
முரசொலி மாறன்
முசிறிப்புத்தன்

Madras State Electricity Board

TENDER NOTICE

SPECIFICATION NO C. 1039

ENNORE THERMAL SCHEME—Construction of R.C.C. Pile Foundation for the Ash Pumping Station of the Power Station at Ennore near Madras—Specification C. 1039.

1. O. Sealed tenders, in duplicate, superscribed as above will be received by the undersigned, upto 12 0) Noon ON TUESDAY THE 28TH NOVEMBER 1967, for the construction of about 125 (one hundred and twentyfive) numbers of R.C.C. piles each of safe load capacity of about 62.5 Tonnes, driven to a depth of about 50'-0" below pile cap bottom for Ash Pumping Station of the Thermal Power Station at Ennore. The tenders will be opened at 2-30 P.M. in the office of the undersigned on the same day in the presence of such of the tenderers or their representatives as may be present. Tenders received late will be summarily rejected.

2. O Copies of the Specification No. C 1039 can be had from the Office of the undersigned on application enclosing the receipt for payment, obtained by tendering a sum of Rs. 25.75 (Rupees twentyfive and Paise seventyfive only) by Money Order or cash towards the cost of one copy of the Specification inclusive of Sales tax at 3% to the Accounts Officer, Madras Electricity System (Distribution), 157, Mount Road, Madras-2 The Specification No C. 1039 should be clearly furnished to The Accounts Officer, Madras Electricity System (Distribution), while making the above payment and in all correspondence. The above amount is not refundable under any circumstance.

3. O The Madras State Electricity Board, does not bind itself to accept the lowest or any of the tenders. The Board reserves the right to reject any tender or all the tenders and also to award the work to more than one tenderer without assigning any reasons therefor.

SUPERINTENDING ENGINEER
Technical (Civil)
157, Mount Road,
Madras-2

சனநாயகப் பாதுகாப்பு

மாணவர் மாநாடு

29 -- 10 -- 67 ஞாயிற்றுக்கிழமை

சென்னை-தேனும்பேட்டை ஆபட்ஸ்பரி மண்டபத்தில்

★

தலைவர்: துரைமுருகன் பி.ஏ.
திறப்பாளர்: துரைகலியரத்தினம் பி.ஏ.
வரவேற்புரை: ம. செல்வராசன்

சிறப்புரை:

அறிஞர் அண்ணா

இரா. நெடுஞ்செழியன்
மு. கருணாநிதி
கே. ஏ. மதியழகன்
சத்தியவாணிமுத்து
ஏ. கோவிந்தசாமி
செ. மாதவன்
எஸ். ஜே. சாதிக்பாட்சா
மா. முத்துசாமி

சி. பா. ஆதித்தனார்
எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ.
ம.பொ. சிவஞானம் எம்.எல்.ஏ.
எஸ். எஸ். மாரிசாமி எம்.பி.
அப்துல் சமது எம்.பி.
முரசொலி மாறன் எம்.ஏ.

மற்றும் மாணவ மணிகள்.

29—10—67 காலை 9 மணிக்கு நேப்பியர் பூங்காவிலிருந்து ஊர்வலம்புறப்பட்டு மாநாட்டுப் பந்தலையடையும்

★

மாநாட்டில், இந்தி எதிர்ப்புத் தியாகி — அண்ணாமலைநகர் மாணவமணி—இராசேந்திரனைப் பற்றி சிவகங்கை சேதுராசனின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

முரசோலி நாடக மன்றத்தார் நடிக்கும்—முரசோலி மாறன் எழுதிய—'வஞ்சியும் காஞ்சியும்' என்ற ஓரங்க நாடகமும், 'அடியார்' எழுதிய 'காந்தியும் அண்ணாவும்' என்ற ஓரங்க நாடகமும் நடைபெறும்.

நன்கொடை: ரூ. 1; மகளிர்க்கு 50 காசு

—சென்னை மாணவர் சனநாயக அணி